சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
17.08.2020 திங்கட்கிழமை

## ஆசிரியர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 17
இளவாலையில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் இனந்தெரியாத கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டுள்ளார் என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: அரியாலையைச் 2

## கஞ்சா பீடியுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 17
கஞ்சா பீடியை வைத்து புகைத்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றையதினம் கோண்டாவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் 2



# 19 திருத்தத்தை நீக்குவது உறுதி

## அமைச்சர் சமல் சபதம்

கொழும்பு, ஓகஸ்ட் 17
ஜனாதிபதி முறையைப் பலப்படுத்துவதே புதிய அரசின் நோக்கம். அதற்காக 19ஆம் திருத்தத்தை முழுமையாக நீக்கியே தீருவோம் இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 2

2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து

## அரசியல் ஆட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 17
'அரசியல் சமரில் ஈடுபட்டு சிறிகொத்தவை கைப்பற்றுவதற்கு நாம் தயாரில்லை. எனவே, தலைமைப் பதவியை ஏற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அக்கட்சி உறுப்பினர்களுக்கு அரசியல் எதிர்காலம் என்பது 2

## புதினம் தெரியுமோ?

இன்டைக்கும் ஒரு தேசியப் பட்டியல் பஞ்சாயத்துத்தான். ஆனால் அது வடக்குக் கிழக்கில இல்லை. இந்த முறை மலையகத்தில. இதுவரை காலமும் மலையகத்தில் இ.தொ.க., மலையக மக்கள் முன் னணி ஆகிய இரண்டு கட்சிகளுமே ஆதிக்கம் செலுத்தி வந்தன. இந்த நிலையில் கடந்த 10 வருடங்களாக தேசிய தொழிலாளர் சங்கம் என்ற கட்சி ஊடாக எழுச்சி பெற்றவர் தான் திகாம்பரம். மனோகணேசன் தலை மையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இணைந்து கொண்டதால் திகாம்பரம் இன்னும் பலமடைந்தார். இந்த நிலையில் கடந்த 2015 பொதுத் தேர்தலில் திகாம்பரத்தின் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வர்தான் மலியப்பு சந்தி திலகர். தமிழின் முக்கியமான படைப்பாளியான திலகராஜா என்கிற திலகர் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் தொடர்பில் அக்கறை கொண்டவர். 2

73 ஆண்டுகளுக்குப் பின்னர்

## ஐ.தே.க. இல்லாமல் நாடாளுமன்ற அமர்வு

கொழும்பு, ஓக. 17
இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் உட்பட நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள 225 2

## 7 சங்கிலி, தாலிக்கொடி நல்லூரில் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஓக. 17
வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூரான் தேர்த்திருவிழாவான இன்றையதினம் ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களின் நகைகள் அபகரிக்கப்பட்ட 8 சம்பவங்கள் இதுவரை பதிவாகியுள்ளன என யாழ்ப்பாணம் பொலி 2

## வியாழன் வரை ஐ.தே.கவுக்கு காலக்கெடு

கொழும்பு, ஓக. 18
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அபே ஜனபல கட்சி என்பவற்றுக்கு உரிய, தேசியக் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை எதிர்வ 2

தனிமைப்படுத்தப்பட்ட

## 120 பேர் விடுவிப்பு

வவுனியா, ஓக. 18
கட்டார் மற்றும் டுபாயிலிருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பெரியகட்டு தனிமைப்படுத்தல் முகா 2

## நாடு முழுதும் மின் தடை!!

கொழும்பு, ஓக. 17
மின் வழங்கலில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் மின்சாரம் இன்று நண்பகல் முதல் நீண்டநேரமாக மின் துண்டிக்கப்பட்டிருந்தது. வத்தளைகெரவலபிட்டி பகுதியில் உள்ள மின்மாற்றியில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாகவே மின்துண்டிப்பு ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். மேலும் மின்சாரம் வழமைக்கு திரும்புவதற்கு சுமார் 2 மணிநேரம் வரையில் தேவைப்படும் என்று அமைச்சர் தெரிவித்தபோதிலும் நீண்டநேரமாகியும் மின்சாரம் துண்டிக்கபட்டே இருந்தது. (ம)

## வேலைவாய்ப்புக்களைப் பெற்ற பட்டதாரிகளின் விவரம் 'ரிலீஸ்'!

கொழும்பு, ஓக. 17
வேலைவாய்ப்புப் பெற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோக 2

## கைதுசெய்ய சென்ற இடத்தில் பொலிஸார் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரைக் கைது செய்யச் சென்ற கோப்பாய் பொலிஸார் மீது இனம்தெரியாத குழுவொன்று தாக்குதலை நடத்தியுள்ளது. 2

# 19 திருத்தத்தை...

19ஆவது திருத்தம் தொடர்பில் தற்போது தொடர்ச்சியாக முன்பின் முரணான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அரச தரப்புக்குள்ளேயே சிலர் 19ஆவது திருத்தம் நீக்கப்படாது என்றும், சிலர் பகுதி அளவில் நீக்கப்படும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சமல் ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை எவரும் விரும்பவில்லை. புதிய அரசமைப்பையே விரும்புகின்றோம். ஜனாதிபதியின் விருப்பமும் அதுவாகத்தான் உள்ளது.

எனவே புதிய அரசமைப்புக்கான எமது பணிகள் தொடரும். அதற்கு முன்னர் எமது கரத்தை நாம் பலப்படுத்துவோம். நிறைவேற்று அதிகாரத்தையும், ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமான அதிகாரத்தையும் நாம் பலப்படுத்துவோம்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் தர்க்கமற்ற ஒன்றாகக் காணப்படுகின்ற படியால் அதனை முழுமையாக நீக்குவோம் என்றார். (ம-22)

# ஆசிரியர் மீது...

சேர்ந்த இந்த ஆசிரியர் இன்று காலை தான் கற்பிக்கும் பாடசாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே மேற்படி தாக்குதல் இடம்பெற்றுள்ளது. 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் ஆசிரியரை வீதியில் வழிமறித்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் பாடசாலை அதிபர் ஊடாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கியுள்ளார். சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம26)

# வியாழன்...

ரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெயரிடாவிட்டால், அந்தக் கட்சிகளுக்குரிய ஆசனங்களை வெறுமையாக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத் துக்குத் தெரிவாகியுள்ள நிலையில், சிறைத்தண்டனை அனுபவித்து வரும் உறுப்பினர்களான பிரேமலால் ஜயசேகர, சிவனேசதுறை சந்திரகாந்தன் ஆகியோர், நீதிமன்றத்தின் அனுமதியுடன் நாடாளுமன்றத்துக்கு வருகைத் தரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# அரசியல்...

இருக்காது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகலை மாவட்ட வெற்றி வேட்பாளர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இன்று காலை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் ஆதரவும், வாக்கு வங்கியும் ஐக்கிய மக்கள் சக்தியின் வசமே இருக்கின்றது. பொதுத்தேர்தலில் இதனை நாம் உறுதிப்படுத்தினோம். எனவே, ரணில் அணியினர் இனியாவது உறுதியானதொரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ரணிலுடன் இருக்கும் உறுப்பினர்களுக்கு மாகாணசபைத் தேர்தலில்கூட வெற்றிபெறமுடியாத நிலை ஏற்படும். முடியுமானால் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று காட்டுமாறு ரங்கே பண்டார, அகிலவிராஜ், வஜிர உள்ளிட்டோருக்கு சவால் விடுக்கின்றோம். முடியாது. இனி அவர்களால் பிரதேச சபைத் தேர்தலில்கூட வெற்றிபெறமுடியாது. ஆகவே, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பதவியை ஏற்குமாறு சஜித்துக்கு ரணில் அணியினர்தான் வலிந்து அழைப்பு விடுக்கவேண்டும். அவ்வாறு விடுக்கப்படும் அழைப்பில்தான் அவர்களின் அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது. நாம் வலிந்து சென்று பதவியைக் கேட்கப்போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தியாக முன்நோக்கி பயணிப்போம். ஐ.தே.கவின் தலைமைப்பதவி வழங்கப்படுமானால் அதனை சஜித் ஏற்று கூட்டாக பயணிக்கக் கூடியதாக இருக்கும். 2024ஆம் ஆண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து எமது அரசியல் நகர்வுகள் இடம்பெறும். இன்னும் இரண்டு மாதங்களில் சஜித்தின் நேரடி பங்களிப்புடன் கீழ்மட்ட அரசியல் இயந்திரம் கட்டியெழுப்பப்படும்' என்றார். (ம-44)

# புதினம் தெரியுமோ

சிறந்த புத்திஜீவி. எனவே அவரின் இணைவு இன்னும் பலம் சேர்க்கும் என்று திகாம்பரம் எண்ணினார்.

2015 இல் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் வென்றவர்களில் திகாம்பரமும் திலகரும் அடங்குவர். இந்தத் தேர்தல் வரை இருவரும் மிக நெருக்கமாகவே இருந்தார்கள். ஆனால் தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் திகாம்பரம் தாக்கல் செய்த வேட்புமனுவில் மல்லியப்பு சந்தி திலகரின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அப்போதே இருவருக்கும் இடையே பெருவிரிசல் ஏற்பட்டுவிட்டதாக கதைகள் அடிபட்டன. வழக்கம்போல இருவரும் அதனை மறுத்தார்கள். திலகருக்கு தேசியப் பட்டியல் மூலம் ஆசனம் வழங்க இருப்பதாக திகாம்பரம் சொல்லிக் கொண்டார்.

தேர்தல் முடிவுகள் வந்தன. இம்முறை மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து போட்டியிட்டது. ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனங்களின் எண்ணிக்கையோ வெறும் 6 தான். இந்த ஆறில் பங்காளிக்கட்சிகளுக்கு எந்தவொரு ஆசனத்தையும் வழங்கமுடியவில்லை. இதனால் திலகருக்கு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்கவில்லை.

இந்த செய்தி கிடைத்தது தான் தாமதம் " வேட்பாளர் பட்டியலில் எனது பெயரைச் சேர்க்க வேண்டுமாயின் இரண்டு கோடி ரூபா தர வேண்டுமென திகாம்பரம் கேட்டார்" என்று அரசசார்பு ஊடகம் ஒன்றுக்கு திலகர் திடீர் வெடிகுண்டொன்றைப் போட்டுள்ளார். ஆனால் தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்காத ஏமாற்றத்தில் தான் திலகர் இப்படி பழிபோடுவதாக திகாம்பரம் தரப்புக் கூறுகின்றது. தேசியப் பட்டியல் நியமனம் என்பது இலங்கையில் எந்தவொரு கட்சியையும் விட்டு வைக்காமல் போட்டுத்தாக்கியுள்ளது என்பதற்கு திலகரின் கதையும் ஒரு சாட்சி.

– பட்சி

# கஞ்சா...

பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான நபர் இணுவில் கிழக்கு பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் என பொலிஸார் கூறினர். வீதி கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற இளைஞனை பிடித்து விசாரணை செய்த போது கஞ்சா பீடியினை வைத்து நுகர்ந்து கொண்டிருந்தார் என்று பொலிஸார் கூறினர். கைதான நபரை யாழ்ப்பாணம் நீதி மன்றில் முற்ப டுத்தி வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர் கோப்பாய் பொலிஸார். (ம-25)

# ஐ.தே.க. ...

உறுப்பினர்களில் 223 பேர் அன்றைய தினம் சபை அமர்வில் பங்கேற்கவுள்ளனர். எமது மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தேசியப் பட்டியலுக்கான உறுப்பினர் விவரங்களை வழங்காததாலேயே 223 பேர் முதலாவது அமர்வில் கலந்துகொள்ளவுள்ளனர். முன்னாள் பிரதமர் அமரர் டி.எஸ்.சேனாநாயக்க தலைமையில் 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி 1947ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது.

அதன் பின்னர் 1952, 1956, 1960, 1965, 1970, 1977, 1989, 1994, 2000, 2001, 2004, 2010, 2015 மற்றும் 2020களில் நடைபெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டுள்ளது. இதில் 8 தேர்தல்களில் அக்கட்சி வெற்றிபெற்றுள்ளது. 1956ஆம் ஆண்டுதான் பெரும் தோல்வி ஏற்பட்டது. இருந்தாலும் நாடாளுமன்றத்துக்கு எட்டுப் பேர் தெரிவாகினர். எனினும், இம்முறைதான் அக்கட்சியால் தேர்தல்மூலம் ஓர் ஆசனத்தைக்கூட வெல்லமுடியாமல்போனது. தேசியப்பட்டியல் ஊடாகவே ஓர் ஆசனம் கிடைத்துள்ளது. எனவே, இலங்கையில் பழமையான அரசியல் கட்சிகளுள் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல்கூடும் நாடாளுமன்ற தொடராக இத்தொடர் அமையவுள்ளது. (ம-44)

# 7 சங்கிலி,...

ஸார் தெரிவித்தனர். 7 தங்கச் சங்கிலி, ஒரு தாலிக்கொடி என எட்டுத் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த முறைப்பாடுகளுக்கு அமைய வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-25)

# 120 பேர்...

மில் தங்க வைக்கப்பட்டிருந்த 120 பேர் இன்றையதினம் விடுவிக்கப்பட்டனர்.

கோவிட்19 நோய்த் தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் கட்டார் மற்றும் டுபாயிலிருந்து அழைத்துவரப்பட்ட பயணிகள் பெரியகட்டு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில், 120 பேர் அவர்களது சொந்த இடங்களான திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, கேகாலை, கண்டி, பதுளை போன்ற பகுதிகளுக்கு பஸ்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர். (ம-110)

# வேலைவாய்ப்புக்களை...

பூர்வ இணையத்தளத்திற்கு சென்று மேற்படி பெயர்ப் பட்டியலைப் பார்வையிட முடியும் என அமைச்சின் செயலாளர் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமன கடிதம் எதிர்வரும் நாள்களில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்துள்ளார். புதிய நியமனம் பெற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி தங்களுக்கு அருகில் உள்ள பிரதேச செயலகங்களில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, குறைந்த வருமானம் கொண்ட ஒரு லட்சம் பேரின் வேலை வாய்ப்பு தொடர்பில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் முதல் அதற்கான செயலணி நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கைதுசெய்ய சென்ற...

இந்தச் சம்பவத்தில் இரண்டு பொலிஸார் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஊரெழு போயிட்டிப் பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரை கைது செய்வதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரண்டு பொலிஸார் சென்றுள்ளனர். அப்பகுதிக்குச் சென்று இந்த நபரை தேடித் திரிந்தபோது அங்கு இரு தரப்புக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. குறித்த முரண்பாடு தொடர்பில் விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீது அங்கு நின்ற இளைஞர் குழு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இதில் இரண்டு பொலிஸார் காயமடைந்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம20)

# நாட்டில் கொரோனா: 2,893

நாட்டில் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,893 ஆக உயர்வடைந்துள்ளது. இதே வேளை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,670 ஆக காணப்படுகிறது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான 212 நபர்கள் தற்போது நாடு முழுவதும் உள்ள ஐந்து வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதன்படி, 102 நபர்கள் கந்தகாடு புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை நிலையத்திலும், 62 பேர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையிலும், 18 பேர் மினுவாங்கொட ஆதார வைத்தியசாலையிலும், 17 பேர் தேசிய தொற்று நோய் வைத்தியசாலையிலும், 10 பேர் இரணவில வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. மேலும், சந்தேகத்தின் பேரில் 55 பேர் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி3)

# மஞ்சள் தூளுடன் கோதுமைமா கலப்பு

## பரிசோதனை அறிக்கையில் வெளிச்சம்

மன்னார், ஒக.17

மன்னார் பஸார் பகுதியில் மஞ்சள் தூளுடன் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்து விற்பனை செய்வது தெரிய வந்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

மன்னார் பஸார் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் மஞ்சள் தூள் பதுக்கி வைக்கப்பட்டு அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் 100 கிராம் மஞ்சள் தூள் 350 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ மஞ்சள் தூள் 3500 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை பதுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது எனப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் மஞ்சள் தூளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் பெரிய அளவில் இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. விற்பனை செய்யப்படும் மஞ்சளில் பெரும்பாலானவற்றில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது .

மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மாவுடன் வர்ணங்களைக் கலந்து விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைத் துள்ளது. அதற்கமைய, சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சளின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அரச இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டிருந்தன. அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் மஞ்சள் தூளின் அரைவாசியில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது. (ரி1-56)





# மட்டக்களப்பில் இரத்ததான முகாம்

மட்டக்களப்பு, ஒக.17

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வேண்டுகோளில் மட்டக்களப்பு ஹரித்தாஸ் எகட் அமைப்பின் சர்வமத இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று மட்டக்களப்பில் நடத்தப்பட்டது. பொதுநல விரும்பிகளின் ஒத்துழைப்புடனும் நடத்தப்பட்ட இந்த இரத்ததான முகாமில் பெருமளவான இளையோர் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் கே.விவேக் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்தானமுகாமில் மட்டக்களப்பு ஹரித்தாஸ் எகட் அமைப்பின் சர்வமத அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையைப் பூர்த்திசெய்யும் வகையில் பல்வேறு இடங்களிலும் நலன் விரும்பிகளினாலும் பொது அமைப்புகளினாலும் இரத்ததான முகாம் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1-150)

ஏ9 வீதியோரத்தில் வீசப்பட்டிருந்த

# பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர் இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஒக.17

விதையனைத்தும் விருட்சமே குழுமத்தின் "பிளாஸ்டிக் கழிவுகள் அற்ற யாழ்ப்பாணத்தை நோக்கி" வேலைத் திட்டத்தின் முதல் கட்டமாக ஏ9 வீதியில் கைதடிச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் வீதியோரம் வீசப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் சமூகப்பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 150 மூடைகளில் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டன என்றும், இது ஒரு கவலைக்குரிய விடயமாகும். இதனை பயணிகள் கவனம் எடுத்து செயற்பட்டால் பிரதான வீதியோரம் இவ்வாறு பெருமளவு கழிவுகள் பெருகுவதைக் குறைக்க முடியும் என்றும் இச் செயற்பாட்டை முன்னெடுத்த இளைஞர்கள் தெரிவித்தனர். (ரி1)







# பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை முகாம்

பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை முகாம் ஜே/181 ,ஜே/179 கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்று நடை பெற்றது. தெரு நாய்களினால் ஏற்படும் விபத்து மற்றும் மனித வாழ்வுக்கு ஏற்ப டும் அச்சுறுத்தல் ஆகியவற்றை குறைப்ப தற்கு சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பனிமனை ஏற்பாட்டில் இந்த இலவச முகாம் நடத்தப்பட்டது. (ரி-17)

# மணிக்கோபுரம் திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஒக.17

சாவகச்சேரி அஞ்சலக வீதியில் உள்ள அமெரிக்கன் சிலோன் மிஷன் சாவகச்சேரி திருச்சபைக்கு அமைக்கப்பட்ட மணிக்கோபுரம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இது இப்பகுதியைச் சேர்ந்த .காலஞ்சென்ற பூதத்தம்பி குலவீரசிங்கம் தம்பதியினரின் நினைவாக அவரது குடும்பத்தினரின் அன்பளிப்பாக அமைக்கப்பட்டதுடன், திருச்சபையின் ஓய்வு நிலை போதகர் பி.ஜே.சூரியகுமாரால் திறந்து வைக்கப்பட்டது. (ரி1-9)





# பொலிஸ் விசேட அதிரடிப்படைனர் பாதுகாப்பில் சிறைச்சாலைகள்?

கொழும்பு, ஓக.17

சிறைச்சாலைகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை, பூஸா சிறைச்சாலை ஆகியவற்றுக்கே விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளது எனவும், இதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். (ரி3)

# 250 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக.17

கிளிநொச்சி உருத்திரபுரம் 10ஆம் வாய்க்கால் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 23 லீற்றர் கசிப்பும் 250 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மது ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றத்தகவலுக்கமைய இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது என மது ஒழிப்புபிரிவு பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார். (ரி1-113)

# முட்டை விலை மேலும் உயர்வு

கொழும்பு, ஓக.17

நாட்டில் முட்டையின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் ஒரு முட்டையின் சில்லறை விலை 22 முதல் 24 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. சில பகுதிகளில் ஒரு முட்டையின் விலை 25 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் தினசரி முட்டை நுகர்வு சுமார் 85 லட்சமாக உள்ளது, இந்நிலையில் தற்போது அது சுமார் 30 சதவீதம் குறைந்துள் ளது. கொரோனா பரவலையடுத்து, கோழி வளர்ப்பு குறைந்து வருவதும், விலங்குகளின் தீவனத்திற்கு அரிசி பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டதும் முட்டை விலையின் அதிகரிப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கால்நடை தீவனப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசு தலையிட்டால் முட்டைகளின் விலையைக் குறைக்க முடியும் என அனைத்து இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ரி3)

### புதிய நாடாளுமன்ற அமர்வில்

# எளிமையான முறையில் வரவேற்பை முன்னெடுங்கள்

## ஜனாதிபதி கோத்தாபய உத்தரவு

கொழும்பு, ஓக.17



புதிய நாடாளுமன்ற அமர்வின் போது ஜனாதிபதி வருகையை ஆடம்பரச் செலவுகள் இன்றி மிகவும் எளிமையாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

வழமையாக புதிதாக நாடாளுமன்றம் வரும் ஜனாதிபதிக்கு இராணுவ மற்றும் குதிரை அணி வகுப்பு உட்பட பிரமாண்ட வரவேற்பு வழங்கப்படும். இந்நிலையில் எதிர்வரும் 20ஆம் திகதி புதிய நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் அதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பங்கேற்று அரியாசன உரை ஆற்றவுள்ளார். அன்றைய தினம் எந்தவித ஆடம்பர நிகழ்வுகளும் இன்றி ஜனாதிபதியை வரவேற்பதற்காக வெற்றிக் கீதத்தை மாத்திரம் பாடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் நடத்தக் கூடாத நிகழ்வுகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் மீண்டும் வினவ வேண்டும் என நாடாளுமன்ற பொது செயலாளர் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார். (ரி3)

# அரச பணியாளர் ஹெரோய்னுடன் கைது

கொழும்பு, ஓக.17

அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் பணியாளர் ஒருவர் போதைப்பொருளுடன் அத்துருகிரிய பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து 18 கிராம் ஹெரோய்ன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனவும், விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

# அங்கொட லொக்காவின் துப்பாக்கி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.17

இந்தியாவின் தமிழகத்தில் மரணமான இலங்கையின் போதைவஸ்து கடத்தல்காரார் அங்கொட லொக்கா வைத்திருந்தார் எனக் கூறப்படும் கைத்துப்பாக்கி தொடர்பில் தமிழக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அங்கொட லொக்கா இறந்த பின்னர் அவரின் சடலத்தை தகனத்துக்காக மதுரைக்கு எடுத்துச்சென்றபோது அவரின் கைத்துப்பாக்கியை அவருடன் தங்கியிருந்த தாஞ்சி என்ற இலங்கைப் பெண் மற்றும் சிவகாமசுந்தரி என்ற தமிழக சட்டத்தரணி ஆகியோர் இலங்கையர் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

இதனையடுத்து அந்த கைத்துப்பாக்கி தொடர்பில் விசாரணைக்காக சிறப்பு பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் அங்கொட லொக்காவின் மரணத்தின் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கைப் பெண் மற்றும் இந்தியர்கள் இருவர் ஆகியோரை நாளைமறுதினம் புதன்கிழமை வரை தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது. (ரி3)

## எலி வாகனம் அன்பளிப்பு....





முல்லைத்தீவு மாவட்டத்தின் நெடுங்கேணி தண்டுவான் மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்திற்கு எலி வாகனம் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் என்பவர் மற்றும் அவருடைய நண்பர்களால் இந்த வாகனம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ரி1-222)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற செயலாளர் அழைப்பு

கொழும்பு, ஓக.17

நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்வில் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

9ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இதுவரை வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 223 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எங்கள் சக்தி மக்கள் கட்சி ஆகியன மட்டுமே இதுவரை தமது தேசியப்பட்டியல் உறுப்பினரைத் தெரிவுசெய்யாமை காரணமாகவே 223பேருக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஒகஸ்ட் 20ஆம் திகதி அமர்வின்போது சபாநாயகர் தெரிவு, பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித்தலைவர் தெரிவு என்பனவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செல்வச்சந்நிதியானுக்கு நாளை மறுதினம் கொடியேற்றம்

வடமராட்சி, ஓக. 18

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 15 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## பேருந்தில் சிக்கி ஒருவர் உயிரழப்பு

நுவரெலியா, ஓக.18

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சில்லில் சிக்கி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்

இச்சம்பவம் நேற்று மாலை மணியளவில்நுவரெலியா பேருந்து தரிப்பிடத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. நுவரெலியா டிப்போவிலிருந்து பேருந்து தரிப்பிடத்துக்குச் சென்ற பேருந்திலேயே குறித்த நபர் மோதுண்டு சில்லில் சிக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வீதியைக் கடக்க முற்பட்டபோதே விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பேருந்தின் சாரதியை கைது செய்துள்ளதுடன் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்கள் இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பதினேழாவது நாளாகிய நாளை செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை தென் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ம.அப்துல்லா ரமீஸ் "இலங்கைத் தமிழ் இதழ்கள்" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996

pass word : wts

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஓக.16

கொரோனா வைரஸ் காரணமாக தடைப்பட்டிருந்த சுற்றுலா ஏற்றுமதி மற்றும் நிர்மாண நிலையங்களை முறையாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என சுற்றுலா தொழிற்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டு சபையின் கட்டுநாயக்க வலய அலுவலகத்தை பார்வையிட்ட பொழுதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார். தடைப்பட்டுள்ள ஆடை ஏற்றுமதியை முறையாக முன்னெடுப்பது தொடர்பில் வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ரி1)

## 10 ஆண்டுகள் தலைமறைவு : கொலைக் குற்றவாளி கைது

கொழும்பு, ஓக.17

கொலைக் குற்றச்சாட்டு தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டு 10 ஆண்டுகளாக தலைமறைவாகியிருந்த நபர் ஒருவர் நேற்று மாலை பண்டாரகம பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

1995 ஆம் ஆண்டு சூரியவெவ பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டு 2010 இல் அவரைக் கைதுசெய்ய எல்பிட்டிய நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது. அவர் 10 ஆண்டுகளுக்கு மேலாக பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பி தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். 52 வயதான இவர் ஒப்பந்தத் தொழிலாளி என்று கூறப்படுகின்றது. (ரி3)




## துருக்கிய விமான சேவை நிறுவன ஊழியருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஓக.17

துருக்கிய விமான சேவை நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இந்த நபர் சீதுவையில் உள்ள விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் இலங்கையில் நான்கு பேர் வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு பேரில், இரண்டு பேர் ஐக்கிய அரபு இராஜியத்தில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனவும், ஒருவர் மாலைதீவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவில் இருந்து நாடு திரும்பியவர் கல்கிசையில் உள்ள ஹோட்டலில் தனிமைப்படுத்தலில் இருந்த நிலையில், அவருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று வரை 30,524 பேர் தனிமைப்படுத்தல் பணிகளை நிறைவு செய்து வீடு திரும்பினார் என கொரோனா பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது. (ரி3)

## தரமற்ற அழகு சாதன பொருள்கள் விற்பனை பெண் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.17

தரமற்ற அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்து வந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முந்தளம் விஜயகடுபத பிரதேசத்தில் இயங்கி வந்த அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் உள்ள பெண் சமூக வலைத்தளங்களின் ஊடாக தரமற்ற இந்தத் தயாரிப்புகள் தொடர்பில் விளம்பரம் செய்து, இதனூடாக தொடர்புகொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு அஞ்சல் மூலமாக பொருள்களை விநியோகித்து வந்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக உற்பத்தியாளர், தயாரிப்பாளர் மற்றும் விநியோகஸ்தர்களின் விவரங்கள் எதுவுமின்றி தரமற்ற அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்து வந்த 3 விற்பனை நிலையங்களில் நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சிலாபம், முந்தளம், விஜயகடுபத ஆகிய பகுதிகளில் இயங்கி வந்த அழகு சாதன விற்பனை நிலையங்களிலேயே இவ்வாறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ரி3)

## ஓட்டோ- மோ.சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

வவுனியா, ஓக.17



வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள சுற்றுவட்ட சந்தியில் நேற்று இரவு முச்சக் கரவண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா ஹோரவப்போத்தானை வீதியூடாக மாவட்ட செயலக பக்கம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியுடன் கண்டி வீதியூடாக வைத்தியசாலை வீதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் பொது வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள சுற்றுவட்ட சந்தியில் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவரும் முச்சக்கரவண்டியின் சாரதி உட்பட இருவரும் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் சாரதி விதிமுறைகளை கடைப்பிடிக்கவில்லை எனவும் முச்சக்கரவண்டியின் சாரதி வேகமாக வாகனத்தினை செலுத்தியமையினால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்தமையாலும் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது எனவும் வவுனியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1-18)

# தேரேறி அருட்காட்சி தந்தான் நல்லைக் கந்தன்...!





படங்கள் பா.ரிஷிகேஸ்வர்







யாழ்ப்பாணம், ஒக. 17

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று பக்திபூர்வமாக நடைபெற்றது. பெருந்திருவிழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்த நிலையில் 24 ஆம் நாளான நேற்று தேர்த் திருவிழா நடைபெற்றது.

சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய திருத்தேரில் வலம் வந்து காட்சி தந்த வேலனை காண பெருந்திரளான மக்கள் அங்கு கூடியிருந்தனர். காலை 4.30 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுக பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் காலை 6 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். கொரோனா தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளுடன் பக்தர்கள் தங்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர். தேர்த் திருவிழாவை காண நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகைதந்து முருகப்பெருமானை தரிசித்துச் சென்றனர்.

இதேவேளை இம்முறை கொரோனா தொற்றுக் காரணமாக அங்க பிரதட்சணம், காவடிகள், கற்பூரச் சட்டிகள் போன்ற நேர்த்திக் கடன்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. (ஐ)

# சுகாதார நடைமுறைகளுடன் செயற்படும் உலகின் முதல் தேயிலை தொழிற்சாலை

## *இலங்கைக்கு தர நிர்ணயச் சான்றிதழ்*

கொழும்பு, ஒக.17

கொரோனா வைரஸைத் தடுப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேயிலை உற்பத்தி செய்யும் உலகின் முதல் தேயிலை தொழிற்சாலை என்ற பணியக தர நிர்ணயச் சான்றிதழலை இலங்கைத் தேயிலை தொழிற்சாலை ஒன்று பெற்றுள்ளது.

ஹற்றன் கொட்டகலை மவுண்டன் வர்னன் தேயிலை தொழிற்சாலையே இந்தச் சான்றிதலைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை தர நிர்ணய பணியகம் பரிந்துரைத்த பொருத்தமான சுகாதார ஆலோசனைகளுடன் தேயிலை கொழுந்து பறிப்பது முதல் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுவது வரை செயற்படுத்தப்படுகின்றனவா என்பதை இரண்டு மாதங்களுக்கு மேலாக கண்காணித்த பின்னரே இந்த நிலையான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (ரி3)

# விசேட சோதனையில் 1,662 பேர் கைது

கொழும்பு, ஒக.17

கடந்த 24 மணிநேரத்தில் மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் 1,662 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களில் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 696 பேரும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

# பதிவாளர்களுக்கு 6 மாத கொடுப்பனவு இதுவரை இல்லை

## *திருமண பதிவாளர்கள் சங்கம் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக.17

பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவாளர்களுக்கு ஆறு மாதங்கள் கொடுப்பனவு கிடைக்கப்பெறவில்லை என திருமண பதிவாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 2 ஆயிரம் பதிவாளர்கள் பணியாற்றுகின்றனர். கடந்த காலங்களில் ஆயிரத்து 662 பதிவாளர்கள் செயற்பட்டனர். முன்னாள் அமைச்சர் முறையற்ற விதத்தில் மேலும் 200 பேருக்கு நியமனங்களை வழங்கினார்.

அவர்கள் உட்பட தற்போது இலங்கையில் 2 ஆயிரம் பதிவாளர்கள் வரையில் செயலாற்றுகின்றனர்.

இந்நிலையில் தற்போது பதிவாளர்களுக்கான கொடுப்பனவு தாமதமடைந்துள்ளது என பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஹேமசிறி ரணசிங்க தெரிவித்துள்ளார். (ரி3)

ஈரான் மீதான ஆயுதத் தடையை நீடிக்கக் கோரும்

# அமெரிக்காவின் தீர்மானத்தை நிராகரித்தது ஐ.நா. பாதுகாப்பு சபை

நியூயோர்க், ஒக.17

ஈரான் மீதான ஆயுதத் தடையை நீடிக்கக் கோரும் அமெரிக்காவின் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிராகரித்துள்ளது. ஈரான் மீதானா ஐ.நா. ஆயுதத் தடை வருகிற ஒக்டோபரில் காலாவதியாகும் நிலையில் அந்தத் தடையை காலவரையின்றி நீடிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக 15 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தது.





எனினும் இந்தத் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகளான சீனா மற்றும் ரஷ்யா கடுமையாக எதிர்த்துள் என. ஒருவேளை இந்தத் தீர்மானம் நிறைவேறினால் தங்களின் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை நிராகரிப்போம் என இந்த 2 நாடுகளும் தெரிவித்திருந்தன. ஐ.நா. பாதுகாப்பு சபையில் கொண்டு வரப்படும் ஒரு தீர்மானம் நிறைவேற வேண்டுமானால் 15 உறுப்பு நாடுகளில் 9 நாடுகள் அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது ஈரான் மீதான ஆயுதத் தடை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அமெரிக்கா மற்றும் டொமினிக்கன் குடியரசு ஆகிய இரு நாடுகளும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட 8 நாடுகள் வாக்களிக்கவில்லை. போதிய ஆதரவு இல்லாததால் அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிராகரித்தது. (ரி1)



## நேபாளத்தில் நிலச்சரிவு 18பேர் சாவு; 21பேர் மாயம்

காத்மாண்டு, ஒக.17

நேபாளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 21 பேர் காணாமல் போயுள்ளனர். நேபாள நாட்டின் பஹ்மதி மாகாண விடி கிராமத்தின் மலைத்தொடர் குடியிருப்புப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் 37 வீடுகள் சேதமடைந்து மண்ணுக்குள் புதைந்தன. இதனால் பலர் நிலச்சரிவில் சிக்கிக்கொண்டனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் மண்ணுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். (ரி1)

ஜேர்மனியிடம் மீளப்பெற்று

## போலந்தில் படைகளை அதிகரிக்கவுள்ள அமெ.

வொஷிங்டன்,ஒக.17

அமெரிக்கா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுக்கு இடையில் புதிய பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜேர்மனியிலுள்ள அமெரிக்க படையினரை மீளப்பெற்று, போலந்தில் நிலைநிறுத்துவது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவினால் இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது. இந்த உடன்படிக்கையின் மூலம் போலந்திலுள்ள அமெரிக்க படையினரின் எண்ணிக்கை 5,500 ஆக அதிகரிக்கவுள்ளது. இதனிடையே அச்சுறுத்தலொன்று உறுதிப்படுத்தப்படுமிடத்து அமெரிக்க படையினரின் எண்ணிக்கையை 20,000 ஆக அதிகரிக்க முடியுமென போலந்து பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். நேட்டோ அமைப்புக்குப் போதியளவு பங்களிப்பை ஜேர்மனி செய்யவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னர் குற்றஞ்சுமத்தியிருந்தார். எவ்வாறாயினும் அமெரிக்காவின் இந்த நகர்வு ரஷ்ய ஆதிக்க விரிவாக்கத்துக்கு வழிவகுக்குமென்ற அச்ச உணர்வு நேட்டோ பங்காளிகளுக்கிடையில் அதிகரித்துள்ளது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ரி1)



## கடலில் மூழ்கிய கப்பல் இரண்டாகப் பிளந்தது

போர்ட் லூயிஸ், ஒக.17

ஆயிரம் டொன் எரிபொருளுடன் மொரீஷியஸ் கடற்கரைப் பகுதி யில் விபத்துக்குள்ளாகிய கப்பல் இரண்டாக பிளவடைந்துள்ளது என அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுமார் 4000 டொன் எரிபொருளை ஏற்றிக் கொண்டு பயணித்த எம்.வி.வகாஷியோ என்ற ஜப்பானுக்குச் சொந்தமான கப்பல், ஜூலை 25ஆம் திகதி மொரீஷியஸ் பகுதியில் ஒரு பவளப்பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் நூற்றுக்கணக்கான டொன் எரிபொருள் கடலில் முன்னதாகவே கலந்துவிட்டது எனத் தெரிவித்த அதிகாரிகள், நேற்று முன்தினம் சனிக்கிழமை கப்பல் இரண்டாகப் பிளவடைந்துவிட்டது எனவு உறுதிப்படுத்தியுள்ளனர். அது மாத்திரமன்றி ஞாயிற்றுக்கிழமை, உத்தியோகபூர்வ தூய்மைப்படுத்தல் குழுவினரால் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் எம்.வி.வகாஷியோ இரண்டு துண்டுகளாகப் பிளவடைந்துள்ளமையை வெளிக்காட்டியுள்ளது. (ரி1)

## டொனால்ட் ட்ரம்பின் சகோதரர் ரொபர்ட் ட்ரம்ப் காலமானார்

வொஷிங்டன், ஒக.17

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இளைய சகோதரர் ரொபர்ட் ட்ரம்ப் காலமாகியுள்ளார். உடல் நலக் குறைவால் நியூயோர்க் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், தனது 72வது வயதில் மரணமடைந்துள்ளார்.

ரொபர்ட் ட்ரம்ப் தனது சகோதரர் மாத்திரமன்றி சிறந்த நண்பன் எனவும் அவரை தான் தவறவிடுகிறேன் எனவும் விரைவில் சந்திப்போம் எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப் தனது சகோதரரின் மறைவு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

ரொபர்ட் ட்ரம்ப் பல்வேறு வர்த்தகங்களில் ஈடுபட்டு வந்தநிலையில், டொனால்ட் ட்ரம்பின் தொழில் நிறுவனங்களில் முக்கிய பொறுப்புக்களையும் வகித்து வந்தார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







## சோமாலியப் படையினரால் 33 சிறுவர்கள் மீட்பு

சோமாலிய அரச படையினர், ஷாபெல் பிராந்தியத்தில் சோமாலியாவை தளமாகக் கொண்ட அல்கொய்தாவுடன் இணைந்த அல்ஷபாப் குழுவுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையில் 33 சிறுவர்களை மீட்டுள்ளனர். சோமாலிய அரசாங்க படையினர், ஆபிரிக்க ஒன்றியப் படைகளின் ஆதரவுடன் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்தே இந்த மீட்புப் பணி இடம்பெற்றுள்ளது. (ரி1)

# ரெய்னா வித்தியாசம்

## இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவிப்பு




புதுடில்லி, ஓக.17

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதை வெளிப்படையாக அறிவித்த மறுநாள்தான், சுரேஷ் ரெய்னா தனது அதிகாரபூர்வமான ஓய்வு கடிதத்தை எங்களுக்கு அனுப்பியுள்ளார் என்று இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சுரேஷ் ரெய்னா செய்த செயலை விமர்சன மாக இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவிக்கவில்லை என்றபோதிலும், பொதுவாக ஒரு கிரிக்கெட் வீரர் ஓய்வு குறித்து அறிவிக்கும் முன் கிரிக்கெட் சபையிடம் தெரிவித்து ஆலோசித்த பின்புதான் அறிவிப்பார். அதுதான் வழக்கமான நடைமுறை. அந்த வழக்கமான நடைமுறையிலிருந்து ரெய்னா தவறியுள்ளார் என்பதை இந்தியக் கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக மகேந்திர சிங் டோனி அறிவித்த சில நிமிடங்களில் சுரேஷ் ரெய்னாவும் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்தார். சுரேஷ் ரெய்னாவின் அறிவிப்பு அவரின் நெருங்கிய நண்பர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகிகளுக்கும் வியப்பாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது.

ஆனால், மகேந்திரசிங் டோனியைப் பொறுத்தவரை அவர் கிரிக்கெட் சபையிடம் அவர் தன்னுடைய ஓய்வு குறித்து முறைப்படி தெரிவித்ததால், அவரின் ஓய்வு அறிவிப்பை கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டது. சுரேஷ் ரெய்னா ஓய்வு தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபைக்கு அவர் அனுப்பிய கடிதம் குறித்து அந்த அமைப்பின் தலைவர் சவுரவ் கங்குலி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

சுரேஷ் ரெய்னா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பை ஞாயிற்றுக்கிழமைதான் எங்களிடம் தெரிவித்தார். அணியில் கீழ்நிலை வரிசையில் ரெய்னா களமிறங்கியபோதிலும், அவரின் அதிரடியான ஷாட்கள், நிதானமான ஆட்டத்தால் அணியை பலமுறை வெற்றிக்கு அழைத்துச் சென்றுள்ளார். யுவராஜ் சிங், டோனி ஆகியோருடன் நடுவரிசையில் சுரேஷ் ரெய்னா இணைந்து பல வெற்றிகரமான இணைப்பாட்டங்களைக் கட்டமைத்துள்ளார். அவருக்கும், அவரின் குடும்பத்தாருக்கும் எங்களது வாழ்த்துகள்-என்றுள்ளது.(எ)



# இது சரியல்ல டோனி

## இன்சமாம் ஆதங்கம்

லாகூர், ஓக.17

டோனிக்கு லட்சக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். அவர் மைதானத்தில் விளையாடுவதை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆளுமை மிக்க, பலரும் விரும்பும் ஒரு வீரர் வீட்டில் அமர்ந்தபடி ஓய்வு அறிவிப்பது சரியல்ல. களத்தில் அவர் ஓய்வு அறிவித்திருக்க வேண்டும்.

இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சச்சின் டெண்டுல்கரிடம் ஒருமுறை நான் கூறியதும் இதைத்தான். இவ்வளவு பெரிய ரசிகர்கள் கூட்டம் இருக்கும் போது மைதானத்தில்தான் ஓய்வு பெற வேண்டும் என்றேன். ஏனெனில் இது உங்கள் மைதானம் அதுதான் உங்களுக்கு இவ்வளவு பெரிய மரியாதைகள், மாலைகளை வழங்கியுள்ளது.

டோனியும் சச்சின் போல் மைதானத்தில் ஓய்வு பெற்றிருந்தால் நிச்சயம் அவரின் ரசிகர்கள் மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். நானும் கூட மகிழ்ச்சியடைந்திருப்பேன், காரணம் இந்திய அணியின் சிறந்த அணித் தலைவர் என்றே நான் அவரை மதிப்பிடுகிறேன்.

வீரர்களை எப்படி உருவாக்குவது என்பதில் டோனி மிகவும் புத்திசாலியானவர், சுரேஷ் ரெய்னா, அஸ்வின் டோனியின் மூலம் வளர்ந்தவர்கள். கிரிக்கெட் பற்றிய டோனியின் புரிதல் கூர்மையானது. அவர் வீரர்களைத் தேர்வு செய்து பெரிய வீரர்களாக உருவாக்கி விடுவார். தனிநபராகவே டோனி போட்டிகளை வெற்றி பெற்றுத் தர முடியும், உதாரணம் 2011 ஆம் ஆண்டு உலகக்கோப்பை இறுதிப் போட்டி. 4ஆம் நிலையில் இறங்கினார் என்றால் அவரது தன்னம்பிக்கை எப்படி இருந்திருக்க வேண்டும் - என்றார். (எ)

# மாரடைப்பால் மறைந்தார் சேத்தன் சவுகான்



புதுடில்லி, ஓக.17

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சேத்தன் சவுகான் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 73. குர்கவானில் மேதாந்தா மருத்துவமனையில் மாரடைப்பு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த சேத்தன் சவுகான் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் காலமானார்.

சேத்தன் சவுகானுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று அவருக்கு சிறுநீரகப் பிரச்சினையும், இரத்த அழுத்தப் பிரச்சினையும் ஏற்பட்டது. அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அபாயகரமான தொடக்க வீரர் என்று கருதப்பட்ட சேத்தன் சவுகான் இந்தியாவுக்காக 40 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடியுள்ளார், சுனில் கவாஸ்கரும், சேத்தன் சவுகானும் இந்தியாவின் சிறந்த தொடக்க வீரர்களாக இருந்தனர், டெஸ்ட் கிரிக்கெட்டில் கவாஸ்கரும், சவுகானும் இணைந்து 10 டெஸ்ட் சதக் கூட்டணியை அமைத்துள்ளனர். 3 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களை ஜோடி சேர்ந்து எடுத்துள்ளனர்.

தனிப்பட்ட சதமே இல்லாத இவரது நீண்ட கரியரில் 2084 டெஸ்ட் ஓட்டங்களை 31.57 என்ற சராசரியில் எடுத்துள்ளார். 97தான் அதிக பட்ச ஸ்கோர். ஓவலில் இங்கிலாந்தின் 438 ஓட்டங்கள் இலக்கை விரட்டும் போது இவரும் கவாஸ்கரும் சேர்ந்து எடுத்த 213 ரன்களை இன்றும் மறக்க முடியாது இவரது மறைவுக்குப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.(எ)

# டோனிக்காக ஓர் ஆட்டம்




புதுடில்லி, ஓக.17

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற டோனியைக் கௌரவிக்கும் வகையில், அவருக்காக கடைசியாக ஓர் ஆட்டம் நடத்த வேண்டும் என்று ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் டோனி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்துள்ளார்.

கடந்தாண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டம்தான் டோனி கடைசியாக விளையாடிய சர்வதேச கிரிக்கெட் ஆட்டம்.

இந்த நிலையில் டோனிக்காக கடைசியாக ஒரு சர்வதேச ஆட்டத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் விருப்பம் தெரிவித்துள்ளார். டோனியின் பயிற்சியாளரும் ஹேமந்த் சோரனின் விருப்பத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆனால், டோனிக்கான கடைசி சர்வதேச ஆட்டத்துக்கு வாய்ப்பில்லை என்று ஐ.பி.எல் முன்னாள் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தன்னுடைய கடைசி ஆட்டத்துக்கான எந்தவொரு விருப்பத்தையும் இந்தியக் கிரிக்கெட் சபையிடம் டோனி வெளிப்படுத்தவில்லை. அவர் இந்தக் கோரிக்கையை எழுப்பாததால், அவருக்கான கடைசி ஆட்டம் குறித்த பேச்சுக்கே இடமில்லை- என்றார். (எ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 17.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.